# ஆவின்

அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை, சென்னை-98 -ல் இரண்டு ஆண்டுகளுக்கு (2017-2019) தேவையான ஐஸ்கீரிம் கப் மற்றும் கோன் வகைகளை சிப்பம் செய்து அட்டை பெட்டியில் அடுக்கி குளிர் அறையில் அடுக்கும் பணிக்கு - இரு பிரிவு ஒப்பந்த புள்ளி கோருதல்.

பிரிவு - 1

தொழில் நுட்ப பிரிவு

Ref.No.225/DGM(Dg)/PD/X3/2017

ஒப்பந்தபுள்ளி பெற்றுக்கொண்டவரின் பெயர் ..........................................................

ஒப்பந்தபுள்ளி பெற்றுக்கொண்டவரின் நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம்

..................................................................................................................

...........................................................................................

ஒப்பந்தப்புள்ளி விலை மற்றும் பணம் செலுத்துவதற்கான ரசீது எண்...............

தேதி....................................

இணை நிர்வாக இயக்குநர்

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**
**பால் பொருட்கள் பண்ணை,**
**பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் & 30 பார்ட்,**
**அம்பத்தூர் தொழிற்பேட்டை சென்னை - 98.**

அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை, சென்னை-98 -ல் இரண்டு ஆண்டுகளுக்கு (2017-2019) தேவையான ஐஸ்கீரிம் கப் மற்றும் கோன் வகைகளை சிப்பம் செய்து அட்டை பெட்டியில் அடுக்கி குளிர் அறையில் அடுக்கும் பணிக்கு - இரு பிரிவு ஒப்பந்த புள்ளி கோருதல்.

<u>உள்ளிருப்பு விபரம்</u>


1. ஒப்பந்தபுள்ளி விபரம் மற்றும் திட்ட அட்டவணை - 3
2. இரு பிரிவு ஒப்பந்த புள்ளி விண்ணப்ப படிவம் - 4
3. இணைப்புகள் - 5
4. விண்ணப்பதாரருக்குரிய விளக்கம் - 6
5. தொழில் நுட்ப பிரிவு சரிபார்பு சீட்டு - 7
6. பொது நிபந்தனைகள் - 9
7. தொழில் நிபந்தனைகள் - 12
8. மாதாந்திர பில் சமர்ப்பிக்கும் முறை - 13


ஒப்பந்ததாரரின் கையொப்பம்

**ஆவின்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
பால் பொருட்கள் பண்ணை,
பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் & 30 பார்ட்,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 98.

**ஒப்பந்த புள்ளி பற்றிய விபரம்**

அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை, சென்னை-98 -ல் இரண்டு ஆண்டுகளுக்கு (2017-2019) தேவையான ஐஸ்கீரிம் கப் மற்றும் கோன் வகைகளை சிப்பம் செய்து அட்டை பெட்டியில் அடுக்கி குளிர் அறையில் அடுக்கும் பணிக்கு - இரு பிரிவு ஒப்பந்த புள்ளி கோருதல் மற்றும் திட்ட அட்டவணை.

| | |
|---|---|
| ஒப்பந்த படிவ விற்பணை | - **30.08.2017** முதல் **13.09.2017** வரை (காலை 11.00 முதல் மாலை 3.00வரை அலுவலக வேலை நாட்களில் மட்டும்) |
| ஒப்பந்தபுள்ளியின் விளக்க கூட்டம் | - **06.09.2017** அன்று காலை 11.00 மணி<br>துணை பொது மேலாளர்(பால்பதம்) அலுவலகம்<br>**பால் பொருட்கள் பண்ணை,**<br>தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,<br>பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் & 30 பார்ட்,<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை – 98 |
| ஒப்பந்தபுள்ளி நேரில் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நாள் | - **13.09.2017** அன்று மாலை 3.00 மணி வரை |
| தபாலில் பெறுவதற்கான கடைசி தேதி | - **06.09.2017** |
| பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தபுள்ளி பெறுவதற்கான கடைசி தேதி நேரம் மற்றும் இடம் | - **13.09.2017**அன்று மாலை 3.30 மணி வரை<br>துணை பொது மேலாளர்(பால்பதம்) அலுவலகம்<br>**பால் பொருட்கள் பண்ணை,**<br>தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,<br>பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் & 30 பார்ட்,<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை – 98 |
| **ஒப்பந்தபுள்ளி திறப்பதற்கான தேதி மற்றும் நேரம்.** | - **13.09.2017 அன்று மாலை 4.00 மணி** |
| ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் இடம் | - கூட்ட அறை,<br>**இணை நிர்வாக இயக்குநர் அலுவலகம்,**<br>தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,<br>எண் 29 & 30,<br>அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை – 98 |
| வணிக மதிப்பு ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும் நாளும், நேரமும் | - விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு தொழில் நுட்ப பிரிவு (பகுதி I) ஒப்பந்த புள்ளி திறக்கப்பட்டு அதில் தகுதி வாய்ந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டபின் வணிக மதிப்பீடு (பகுதி II) பிரிவு திறப்பதற்கான நாள், நேரம் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் தெரிவித்து திறக்கப்படும். |

பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தபடிவங்களை தபால் மூலமாகவோ, நேரிலோ அல்லது www.tntenders.gov.in என்ற நிர்ணயிக்கப்பட்ட வளைதள முகவரியிலும் குறிப்பிட்ட தேதிக்குள் சமர்பிக்கலாம். வலைதளம் வழியாக சமர்பிக்கும் டெண்டர்தாரர் அவரது டேவணித்தொகையை டெண்டர் பெட்டியில் சமர்பிக்க வேண்டும்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

இரண்டு பிரிவு ஒப்பந்தபுள்ளி விண்ணப்பம்

அனுப்புநர் பெறுநர்

இணை நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்
பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் & 30 பார்ட்,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-98

அய்யா,

பொருள்: அம்பத்தூர் பால் பொருள் பண்ணையில் அன்றாட விற்பனைக்கான ஐஸ்கீரிம் கப் மற்றும் கோன் வகைகளை சிப்பம் செய்து அட்டை பெட்டியில் அடுக்கி குளிர் அறையில் அடுக்கும் பணிக்கு (இரண்டு ஆண்டுகளுக்கு) ஒப்பந்தபுள்ளி ஆவணம் மற்றும் சான்றிதழ்கள் சமர்ப்பித்தல்.

******

இரு பிரிவு ஒப்பந்தபுள்ளி விவரத்தில் தொழில் நுட்ப பகுதி, பணி செய்வதற்கான விலை புள்ளி பகுதியையும் மற்றும் ஒப்பந்தபுள்ளிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ளோம்.

இரு பிரிவு ஒப்பந்தபுள்ளி விபரத்தை என்னால் ………………………………………….. இந்த நிறுவனத்திற்காக (அ) தொழில் நுட்ப பகுதி **……14……** பக்கங்கள் (ஆ) வணிக மதிப்பு பிரிவு **…2….** பக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தபுள்ளியில் கூறியுள்ள பொதுவான நிபந்தனைகள், அபராதம் விதிக்கும் முறை மற்றும் கால திட்ட அட்டவனை ஆகியவைகளை நன்கு படித்த பின்பே விண்ணப்பிக்கிறேன்.

ஒப்பந்தபுள்ளிக்கான அனைத்து செயல்பாட்டிற்கும் பிரதிநிதியாக சட்டத்திற்கு உட்பட்டு செயல்படுவேன் என உறுதி கூறுகிறேன்.

இரு பிரிவு ஒப்பந்தபுள்ளி நமூனாவில் குறிப்பிடப்பட்டுள்ள, நிபந்தனைகளுக்கும், காலவரையரைகளுக்கும் உட்பட்டு சான்றிதழ்களை சமர்பித்துள்ளேன்.

இணை நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு இந்த ஒப்பந்தபுள்ளியை முழுமையாகவோ, பகுதியாகவோ, நிராகரிக்க உரிமை உண்டு என்பதை நான் …………………………………………………… அறிவேன்.

இந்த ஒப்பந்தபுள்ளி விண்ணப்பம், தொழில் நுட்ப ஒப்பந்தபுள்ளி திறந்த நாளில் இருந்து 120 **நாட்கள் வரை** பொருந்தும்.

விண்ணப்பதாரர் கையொப்பம்

(பெயரும், பதவியும்)

இணைப்புகள்

1. a) டேவணித் (EMD) தொகை ரூ.20000/-க்கான வங்கி கேட்பு வரைவோலையினை (Demand Draft) இணை நிர்வாக இயக்குநர் "Joint Managing Director" பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில்.

   b) வலைதளம் வழியாக சமர்பிக்கும் டெண்டர்தாரர் அவரது டேவணித்தொகையை டெண்டர் பெட்டியில் சமர்பிக்கபட வேண்டும்

2. தங்களின் குடியிருப்பு முகவரி உறுதி செய்யும் வகையில் குடும்ப அட்டை/ வாக்காளர் அடையாள அட்டை / இதர நிரூபிக்கும் வகையிலான அட்டை நகல்

3. குறைந்தது 1 ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் வழங்கும் தொழிலில் அனுபவ சான்று.

4. தங்களிடம் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, தாங்கள் அன்றாட பணிக்கு தேவையான ஆட்களை அனுப்புவேன் என்பதற்கான தங்களின் சுய சான்றிதழ்

5. ஒப்பந்ததாரர் பின்வரும் பதிவுசான்று /ஆவணங்கள் பெற்றிருப்பதற்கான நகல்களை பகுதி 1ல் தவறாமல் இணைக்கவேண்டும்

   1) GST பதிவுசான்று 2) EPF & ESI பதிவுசான்று 3) PAN Card

6. விலைப்புள்ளி பிரிவு - பகுதி II

**குறிப்பு** பகுதி I மற்றும் II தனித்தனி உறையில் சீல் வைத்து அதை ஒரே உறையில் இடப்பட்டு அதையும் சீல் வைத்து அனுப்பப்பட வேண்டும்.

**விண்ணப்பதாரருக்கான விளக்கம்**

ஒப்பந்த புள்ளி விண்ணப்பத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஆவணங்கள் அடங்கியுள்ளன.

பகுதி I ஒப்பந்தபுள்ளி தொழில்நுட்பத் தகுதிகள்.
பகுதி II வணிக ஒப்பந்தபுள்ளிக்கான விலை பட்டியல் இரு நகல்களில்

2.1 அனைத்து நிபந்தனைகளையும், கால திட்ட அட்டவணையையும் படித்த பின்பு ஒப்பந்தபுள்ளி விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும்.

2.2 ஒப்பந்ததாரர் இரண்டு ஒப்பந்த நகல்களை எடுத்து வைத்துக்கொண்டு உண்மை படிவத்தை நிறுவனத்திற்கு சமர்பிக்க வேண்டும்.

2.3 ஒப்பந்தபுள்ளி பகுதி 1ன் மொத்த பக்கங்கள் **......14......** மற்றும் பகுதி 2ன் மொத்த பக்கங்கள் **......2.........** ஆகிய இரண்டையும் சீலிடப்பட்ட தனித்தனி உறையில் தேதி. உறையின் மீது ஐஸ்கீரிம் வகைகளை சிப்பம் செய்யும் பணிக்கான ஒப்பந்தபுள்ளி என எழுதி, ஒப்பந்தபுள்ளி உறையை

பெறுநர்
இணை நிர்வாக இயக்குநர்
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம்
பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் ் 30 பார்ட்,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-98

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் முலமாகவோ உரிய தேதி மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக ஒப்ப ஆவணங்கள் வந்து சேருமாறு அனுப்பவும் கால தாமதமாக வந்து சேரும் ஒப்பந்தபுள்ளிகள் எக்காரணத்தை கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2.4 கொடுக்கப்பட்டுள்ள சரிபார்பு படிவத்தை படித்து நிபந்தனைகளுக்கும், காலவரையரைக்கும் ஏற்றபடி உள்ளதா என உறுதி செய்யவும்.

2.5 ஒப்பந்ததாரர் தொழில் நுட்ப பிரிவு, வணிக பிரிவு, ஆகிய இரு பிரிவுகளின் அனைத்து பக்கங்களிலும் இறுதியில் பெயர் மற்றும் சான்றுடன் கையொப்பம் இடப்பட்டுள்ளதா என உறுதி செய்யவும்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

## தொழில் நுட்ப பிரிவு சரிபார்பு சீட்டு

நிபந்தணைக்கும் காலவரையரைக்கும் உட்பட்டு கீழ்கண்ட தகுதிகளை உறுதி செய்யவும்.

1. பிணை வைப்பு தொகை (EMD) ருபாய் 20000/- க்கான வங்கி கேட்பு வரைவோலை (Demand Draft) இணைக்கப்பட்டுள்ளதா - ஆம்./இல்லை
   ஆம் எனில் வங்கி கேட்பு வரைவோலை (Demand Draft) விபரங்கள், தேதி, வாங்கப்பட்ட வங்கியின் விபரம் முதலியவற்றை தெரிவிக்கவும்.

அ. வங்கி கேட்பு வரைவோலை (Demand Draft) எண்................................, நாள்.............................
ஆ. வங்கியின் பெயர் ........................................................................
இ. வங்கியின் கிளை...........................................................................
ஈ. தொகை ரூ ......................................................................

இணை நிர்வாக இயக்குநர் பெயரில் சென்னையில் மாற்றத்தக்கவகையில்.

2. தங்களின் குடியிருப்பு முகவரி உறுதி செய்யும் வகையில் குடும்ப அட்டை/ வாக்காளர் அடையாள அட்டை / இதர நிரூபிக்கும் வகையிலான அட்டை நகல் - இணைக்கப்பட்டுள்ளதா ? - ஆம்./இல்லை

3. குறைந்தது 1 ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் வழங்கிய தொழிலில் அனுபவ சான்று, - இணைக்கப்பட்டுள்ளதா ? - ஆம்./இல்லை

4. தங்களின் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை. தாங்கள் அன்றாட பணிக்கு தேவையான ஆட்களை அனுப்புவேன் என்பதற்கான தங்களின் சுய சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா ? - ஆம்./இல்லை

5. தற்போதைய தொழிலாளர்கள் வைப்புநிதி செலுத்தும் சான்று மற்றும் மருத்துவ காப்பீடு செலுத்தும் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா ?
   ஆம் எனில்,
   தொழிலாளர் வைப்புநிதி பதிவு எண் - ஆம்./இல்லை
   தொழிலாளர் மருத்துவ காப்பீடு பதிவு எண்

6. தங்களின் பண பரிமாற்றம் நிதி வரவு செலவு உறுதி செய்யும் வகையில் கடந்த ஒரு வருட வங்கி வரவு செலவு பட்டியல் நகல் - இணைக்கப்பட்டுள்ளதா ? - ஆம்./இல்லை

7. வணிக மதிப்பீடு ஒப்பந்த பிரிவு 2 யை எண்ணிலும், எழுத்திலும், திருத்தம் இன்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா ? - ஆம்./இல்லை

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

8. ஒப்பந்தபுள்ளி தொழில் நுட்ப பிரிவு 1 மற்றும் வணிகமதிப்பீட்டு பிரிவு 2ன் அனைத்து பக்கங்களிலும் அத்தாட்சி பெற்றவர் கையொப்பம் இடப்பட்டுள்ளதா ? - ஆம்./இல்லை

9. தொழில் நுட்ப பிரிவு 1 மற்றும் வணிகமதிப்பீட்டு பிரிவு 2 ஆகிய இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் அதற்குரிய தனித்தனி உறையில் இடப்பட்டு உறையை நன்றாக ஒட்ட வைத்து முறையே ஒரு உரையின் மேல் ஐஸ்கீரிம் வகைகளை சிப்பம் செய்யும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி பிரிவு 1 எனவும் அடுத்த உறையின் மேல் ஐஸ்கீரிம் வகைகளை தயாரித்து சிப்பம் செய்வதற்கான ஒப்பந்தபுள்ளி பிரிவு 2 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதா ? - ஆம்./ இல்லை

10. ஒப்பந்ததாரர் பின்வரும் பதிவுசான்று /ஆவணங்கள் பெற்றிருப்பதற்கான நகல்களை பகுதி 1ல் இணைக்கபட்டுள்ளதா?

1) GST பதிவுசான்று
2) EPF & ESI பதிவுசான்று - ஆம்./ இல்லை
3) PAN Card

11. மேலே குறிப்பிட்ட இரு பிரிவுகளின் உறைகளையும் ஒரே பெரிய உறையில் வைத்து உறையின் மேல் ஐஸ்கீரிம் வகைகளை சிப்பம் செய்வதற்கான ஒப்பந்தபுள்ளி என எழுதி கீழ்கண்ட முகவரியை எழுதி நன்கு சரிபார்த்து சீல் இடப்பட்டு அனுப்பட்டுள்ளதா ? - ஆம்./இல்லை

முகவரி

இணைநிர்வாக இயக்குநர் அலுவலகம்
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
பால் பொருட்கள் உற்பத்திப்பண்ணை
பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் ஃ 30 பார்ட்,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-98

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

## பொது நிபந்தனைகள்

1. தொழில் நுட்ப பிரிவு 1 திறந்தபின் ஒப்பந்ததாரருடைய தகுதி, அனுபவம், நிதி மற்றும் தொழிலாளர்களை பணி அமர்த்தும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் வணிக மதிப்பீடு 2 திறக்கப்படும்.

   அ. குறைந்தது 1 ஆண்டு பணியாளர்கள் ஒப்பந்த முறையில் பணியாளர் வழங்கும் தொழிலில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

   ஆ.தங்களின் பண பரிமாற்றம் நிதி வரவு செலவு உறுதி செய்யும் வகையில் கடந்த ஒரு வருடத்தில் வங்கி வரவு செலவு செய்து இருக்க வேண்டும்.

2. தொழில் நுட்ப பிரிவு 1ல் உரிய தகுதி இல்லாமலோ, ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிட்டுள்ளபடி பொதுவான விதி மற்றும் நிபந்தணைகளுக்கு உட்படாத விண்ணப்பதாரரின் வணிக மதிப்பீடு பிரிவு 2 திறக்கப்படமாட்டாது.

3. தொழில் நுட்ப பிரிவு 1 ல் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டும் வணிக பிரிவு 2ல் கோரப்பட்டுள்ள விலையின் அடிப்படையிலும் தகுதி செய்யப்படுவர்.

4. குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொதுவாக தொழில் நுட்ப பிரிவு ஒப்பந்தப்புள்ளி 1 திறக்கப்பட்டு அதில் தகுதி வாய்ந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டபின் ஒப்பந்தப்புள்ளி 1 திறந்த 5 முதல் 30 நாட்களுக்குள் வணிக மதிப்பீடு பிரிவு திறப்பதற்கான நாள், நேரம், தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்படும்.

5. ஒப்பந்தபுள்ளி விண்ணப்ப படிவங்கள் திருத்தப்படவோ, மாற்றப்படவோ கூடாது.

6. அ) டேவணித் தொகை ரூ.20000/-க்கான வங்கி கேட்பு வரைவோலையினை (Demand Draft) "Joint Managing Director, TCMPF Ltd, Chennai-98, Payable at Chennai" என்ற பெயரில் இணைக்கவேண்டும்.

   ஆ) டேவணித் தொகை தொழில் நுட்ப பிரிவு ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைக்கு உட்பட்டு செலுத்த வேண்டும்

   இ) டேவணித் தொகை ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப பிரிவு 1 ஒன்றுடன் இணைக்கப்பட வேண்டும்.

   ஈ) டேவணித் தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் முற்றிலுமாக நிராகரிக்கப்படும்.

   உ) விண்ணப்பதாரர் ஒப்பந்தம் முடிவு செய்யப்படாத நிலையில் விலகிக் கொண்டால் செலுத்திய டேவணித் தொகை முழுவதுமாக இழக்க நேரிடும்,

   வளைதளம் வழியாக சமர்பிக்கும் டெண்டர்தாரர் அவரது டேவணித்தொகையை டெண்டர் பெட்டியில் தவறாமல் சமர்பிக்கபட வேண்டும்

7. உரிய வருமான வரி ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு உரிய பணப்பட்டுவாடா தொகையில் இருந்து பிடித்தம் செய்யப்படும்.

8. தொழிலாளர் மருத்துவ காப்பீட்டிற்கும் தொழிலாளர் வைப்பு நிதிக்கும் ஒப்பந்ததாரரின் பட்டியலில் இருந்து நிறுவனம் எந்தவித முன் அறிவிப்புமின்றி பிடித்தம் செய்யும் உரிமை உண்டு.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

9. ஒப்பந்ததாரர் இப்பணியில் பணிபுரியும் அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களுக்கான ஒப்பந்த வருகை பதிவேடு ஊதிய பட்டுவாடா பதிவேடு தொழிலாளர் நல சட்டங்களின் படியும் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு மற்றும் நெறிமுறை சட்டங்களின் படியும் மற்றும் தற்பொழுது நடைமுறையில் உள்ள சட்டங்களின் படியும் பராமரிக்கப்பட வேண்டும்.

10. ஒப்பந்ததரர் கீழ்கண்ட அனைத்து சட்டங்களுக்கு உட்பட்டு கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.
   அ) தமிழ் நாடு ஒப்பந்த தொழிலாளர் சட்டம்
   ஆ) தொழிலாளர் மருத்துவ காப்பீடு சட்டம்
   இ) தொழிலாளர் வைப்பு நிதி சட்டம்
   ஈ) தமிழ் நாடு குறைந்த பட்ச ஊதிய சட்டம்
   உ) உடல் நல தகுதி சட்டம் மற்றும் உடல் நல தேவை சட்டம் அவ்வப்போது இயற்றப்படும் சட்டத்திற்கேற்ப நடைமுறை படுத்த வேண்டும்

11. ஒப்பந்ததாரர் 18 வயதிற்க்கு கீழே உள்ள தொழிலாளர்களை பணியில் அமர்த்தக்கூடாது.

12. ஒப்பந்ததாரரால் பணி அமர்த்தப்படும் ஒப்பந்த தொழிலாளர்களின் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவர்.

13. தமிழ் நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணயத்திற்கு ஒப்பந்ததாரரால் மற்றும் அவரால் பணி அமர்த்தப்பட்ட ஒப்பந்த தொழிலாளரால் இழப்பீடு, தொழிலாளர் நல இழப்பீடு சட்டம் அல்லது பணி அமர்த்துவோர் சட்டம் மற்றும் இதர சட்டங்கள் இது போன்ற பிற சட்டங்களாலும் இழப்பீடு த.நா.பா.உ.கூ.இணையத்திடமிருந்து எதுவும் கோர முடியாது.

14. நிர்வாகத்தால் நடத்தப்படும் சிற்றுண்டி சாலையில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு எந்த பொருட்களும் சகாயவிலையில் அளிக்கப்படமாட்டாது.

15. ஒப்பந்த தொழிலாளர்களால் பணி அமர்த்தப்படும் பணியாளர்களுக்கு ஏற்படும் விபத்திற்கு கோரப்படும் முழு இழப்பீட்டினை ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும். தொழிலாளர்களுக்கு விபத்து காப்பீடு/ மருத்துவ காப்பீடு செய்தல் போன்றவற்றை சட்டப்படி பின்பற்றி அதன் விபரம் நிர்வாகத்திற்கு சமர்பிக்கப்படவேண்டும்.

16. ஒப்பந்ததாரால் பணிஅமர்த்தப்படும் பணியாளர் அனைவரும் வருடம் ஒரு முறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி தொழிற்சாலை சட்ட விதிகளின்படி சான்றிதழ் நிர்வாகத்திற்கு சமர்பிக்கப்படவேண்டும்.

17. ஒப்பந்ததாரரால் பணி அமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கும் தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை, அவர்களுக்கு சட்டப்படி ஏற்படும் எல்லாவிதமான சட்டபூர்வமான பிரச்சனைகளுக்கும் ஒப்பந்ததாரரே முழு பொறுப்பு.

18. ஒப்பந்ததாரர் கப் இயந்திர பணிக்கு 10பேர், கோன் இயந்திர பணிக்கு 10பேர், என்ற விகிதத்தில் பணியாளர்களை தினமும் வழங்கவேண்டும். மேலும் கப் மற்றும் கோன் இயந்திரத்தில் மணிக்கு 2500 எண்ணிக்கை வீதம் 6 மணி நேரத்தில் உற்பத்தி 15000 குறையாமல் சிப்பம் செய்ய வேண்டும்.
   மேலும உள்ள 2 மணி நேரத்தில் இயந்திரங்களை துய்மை செய்தல், தரை மற்றும் இதர இடங்களில் சுத்தம் செய்தல் பண்டகசாலையில் இருந்து மூல பொருள்கள் மற்றும் பேக்கிங் பொருட்கள் எடுத்து வருதல் போன்ற இதர பணிகளை முறைபணி அலுவலர் உத்தரவுக்கிணங்க செவ்வனே செய்ய வேண்டும்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

19. ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் பெற்ற 15 நாட்களுக்குள் தமிழ் நாடு கூட்டுறவு சட்டம் விதி 18ன் படி இணை உறுப்பினர் ஆகவேண்டும்.

**20. ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட எண்ணிக்கை பணியாளர்களை தரத்தவறினால் ஒப்பந்த விதியின்படி பணியாளர் எண்ணிக்கை மற்றும் அன்றைய உற்பத்தி விகிதப்படி ஒரு நபர் கூலி கணக்கிட்டு அதன்படியும் மற்றும் தேவை ஏற்படின் அபராதமும் சேர்த்து தொகை பிடித்தம் செய்யப்படும், மற்றும் நிர்வாகமே ஆட்களை குறைக்கும் போது மேற்படி பிடித்தம் அதன் அடிப்ப்ண்டயில் செயல்படுத்தப்படும்.**

21. பால் பொருட்கள் பண்ணையில் சிப்பம் செய்யும் பணியில் புதிய தொழில் நுட்ப வகைகளை புகுத்தி உற்பத்தியை பெருக்க பணியாளர்கள் எண்ணிக்கையை குறைக்கும் பட்சத்தில் குறைக்கும் பணியாளர்கள் எண்ணிக்கைக்குண்டான தொகையை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

22. ஒப்பந்ததாரர் பணியாளர்களை பணிக்கு பிரிவு அலுவலர் அவர்களால் அறிவிக்கப்படும் பணி நேரத்திற்கு சரியாக ஆஜர் படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் ஏற்படும் உற்பத்தி குறைவிற்கு ஏற்றாற்போலும் பணி பாதிப்புக்கு ஏற்றாற்போலும் நிர்வாகம் நிர்ணயிக்கும் தொகை அபராதமாக பிடித்தம் செய்யப்படும்.

23. ஒப்பந்ததாரரால் அமர்த்தப்படும் ஒப்பந்த தொழிலாளர்களால் நிர்வாகத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டம், திருட்டு, பொருட்களை வீணாக்குதல், இவை அனைத்திற்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவர் மற்றும் இழப்புகள் அதன் மதிப்பில் இரண்டு மடங்காகவும், தேவைப்படின் அபராதத்துடன் கணக்கிட்டு ஒப்பந்ததாரரின் பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

24. இந்த ஒப்பந்தம் வேலை ஆரம்பித்த நாள் முதல் கணக்கில் கொண்டு இரண்டு வருடம் அமலில் இருக்கும். மேலும் ஒப்பந்த காலம் தேவைப்பட்டால் நிர்வாகத்தால் நீட்டிக்கப்படும்.

25. ஒப்பந்ததாரரால் பணி அமர்த்தப்படுகின்ற தொழிலாளர்கள் சுத்தமான உடை, மேலங்கி வாய் மற்றும் தலை உறைகளுடன் ஒப்பந்ததாரரால் கொடுக்கப்படுகின்ற அடையாள அட்டையுடனும் பணி செய்யும் இடம் மற்றும் தளவாட சாமான்கள் சுத்தமாக பராமரித்து சேதாரம் இல்லாமல் பணி செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் நிர்வாகம் நிர்ணயிக்கும் தொகை அபராதமாக பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

26. ஒப்பந்ததாரர் ஒப்பந்த சம்மந்தமாக ஆணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் ரூபாய் 100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் மேற்குறிப்பிட்ட ஒப்பந்த எழுதி இரண்டு சாட்சி கையெழுத்துக்களுடன் சமர்பிக்கும்படி தெரிவிக்கப்படுகிறது.

27. ஒப்பந்ததாரர் தொழில் நிபந்தனைகளை அல்லது ஏதாவது ஒப்பந்த விதியை மீறினாலோ நிர்வாகம் நடவடிக்கை எடுத்து ஒப்பந்ததாரர் காப்புத் தொகை முழுவதும் இழப்பதுடன் நிர்வாகத்திற்கு ஏற்படும் நட்டத்தையும் மீதமுள்ள பில் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

**28. காப்புத் தொகை (S.D) பணி மதிப்பீட்டு தொகையில் 5% ல் முன்பே செலுத்தப்பட்டுள்ள EMD ரூ.20000/- கழித்து மீதியை ஒப்பந்த ஆணை பெற்றவுடன் பணி ஆரம்பிக்கும் முன்பே செலுத்திவிட வேண்டும். காப்புத் தொகை ஒப்பந்த காலம் முடிந்த பிறகு ஆறு மாதம் கழிந்த பிறகு பிரிவு அலுவலரின் தடையில்லா சான்று கடிதம் பெற்ற பிறகு வழங்கப்படும். காப்புத்தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.**

29. ஒப்பந்ததாரர் நிர்வாகத்துடன் ஏதேனும் தொழில் சம்பந்தமாக தகராறு (அல்லது) சச்சரவு அல்லது கருத்து வேறுபாடு ஏற்பட்டால் துணைப் பதிவாளர் (பால்பதம்) திருவள்ளூர் அவர்களின் தீர்ப்பே இறுதியாகும்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

30. ஒப்பந்ததாரர் பின்வரும் பதிவுசான்று /ஆவணங்கள் பெற்றிருப்பதற்கான நகல்களை பகுதி 1ல் இணைக்கவேண்டும்

1) GST பதிவுசான்று 2) EPF & ESI பதிவுசான்று 3) PAN Card

31. ஏதேனும் காரணங்களினால் ஒப்பந்த விண்ணப்பதாரர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியங்களினாலோ ஒப்பந்தபுள்ளி விண்ணப்பிக்க தடை செய்யப்பட்டு இருப்பது தெரியவந்தால் மேற்படி ஒப்பந்த விண்ணப்பதாரரது ஒப்பந்தபுள்ளி ஏற்கப்படமாட்டாது.

**<u>தொழில் நிபந்தனைகள்</u>**

1. தினமும் உற்பத்தி செய்ய வேண்டிய ஐஸ்கீரிம் வகை 50மிலி/100மிலி/கோன் 100மிலி எண்ணிக்கையை முறைபணி அலுவலர்/உதவி பொது மேலாளர் அவர்களின் உத்திரவுக்கு ஏற்ப உற்பத்தி செய்ய வேண்டும். உற்பத்தி செய்யப்பட்ட ஐஸ்கிரீம் வகைகளை முறையாக கையாண்டு குளிர் அறையில், முறைப்பணி அலுவலர் / அவரால் அங்கிகரிக்கப்பட்ட பணியாளர்கள் கூறும் இடத்தில் அடுக்கி வைக்க வேண்டும்.

2. தேவையான பேக்கிங் மெட்டீரியல், பண்டகசாலையிலிருந்து எடுத்து வருதல், கோடிங் செய்தல், சரியாக அடுக்கி வைத்தல், மீதமுள்ளவை திரும்ப கொடுத்தல போன்ற பணிகளை சரியான முறையில் செய்ய வேண்டும்.

3. இயந்திரத்தின் அருகே என்ன பணி புரிய வேண்டும் என்ற அறிவுறுத்தலின்படி அவரவர் இடத்தில் இருந்து பணிபுரிய வேண்டும்.

4. இயந்திரம் இயக்கம் நடக்கும்பொழுது எக்காரணம் கொண்டும் கவனக் குறைவாக இருக்கக்கூடாது. பொருட்கள் சேதம் ஏற்படாமல் பணிபுரிய வேண்டும்.

5. சிப்பம் செய்த ஐஸ்கிரீம் வகைகளை காலம் தாழ்த்தாமல் உடனடியாக கடினப்படுத்தும் குளிர் அறையில் கொண்டு சென்று முறையாக அடுக்கிவைக்கவும்.

6. பணி ஆரம்பிக்கும் முன்னரும் நிறைவுற்ற பின்னரும் மற்றும் அவ்வப்போதும் இயந்திரம் மற்றும் சம்மந்தப்பட்ட சுற்றியுள்ள பகுதிகளையும் பயன்படுத்தப்படும் தளவாட சாமான்களையும் கழுவி அதற்குறிய இடத்தில் வைக்க வேண்டும்.

7. கடினப்படுத்தும் குளிர் அறையில் இருந்து குளிர் அறைக்கு ஐஸ்கிரீம் வகைகளை பிரிவு அலுவலர் அறிவுறைபடி எடுத்துச் சென்று முறையாக அடுக்க வேண்டும்.

8. பணியாளர்கள் பணி நடைபெற்றக் கொண்டிருக்கும் போது பிரிவு அலுவலர் அனுமதியின்றி பணியிடம் விட்டு அகலக்கூடாது. பணி முடிந்து வெளியேறும் போது பிரிவு அலுவலர் அனுமதி பெற்று வெளியேற வேண்டும்.

9. பணியாளர்கள் ஐஸ்கிரீம் பொருள்களை சாப்பிடக் கூடாது. சாப்பிடுவது கண்டு பிடிக்கப்பட்டால் நிர்வாகம் நிர்ணயிக்கும் தொகை அபராதமாக பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

10. தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வழங்கும் குளிர் தடுப்பு உடுப்புகளை பத்திரமாக பாதுகாவலர் வசம் திருப்பி ஒப்படைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அதன் மதிப்புடன் அபராதமும் சேர்த்து பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

11. பணியாளர்கள் அலுவலர் அறிவுறைப்படி சுயசுகாதாரத்தை தினமும் தவறாது கடைபிடிக்கவும்.

12. ஒப்பந்ததாரால் பணி அமர்த்தப்படுகின்ற தொழிலாளர்கள் தவறாக நடந்துக் கொண்டாலோ, நிர்வாதத்தால் கொடுக்கப்பட்ட செயல் முறைப்படி பொருட்களை தயாரிக்காவிட்டாலோ ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டும், ஏற்படும் நஷ்டங்கள் அபராதத்துடன் ஒப்பந்ததாரரின் கூலி பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

13. மேற்குறிபிட்ட செயல்பாடுகளை கடைபிடிக்கத் தவறினால் சம்பந்தப்பட்ட பணியாளிரின் பெயர் நீக்கம் செய்வதுடன் தக்க அபராதம் விதிக்கப்படும்.

14. எக்காரணத்தைக் கொண்டும் நிர்ணயிக்கப்பட்ட விலையை ஒப்பந்த காலம் முடியும் வரை மாற்ற முடியாது.

15. ஒப்பந்த தொழிலாளர்களின் கவனக்குறைவால் கண்ணாடி கதவு, மற்றும் இதர பொருள்கள் ஏதேனும் உடைந்தால் / சேதம் ஏற்பட்டால் அதற்குண்டான நட்டத்தை ஒப்பந்ததாரர் பில்லில் இரட்டிப்பு தொகை பிடித்தம் செய்யப்படும். அதனால் ஒப்பந்த தொழிலாளர்களை கவனமாக பணி செய்ய அறிவுறுத்த வேண்டும்.

16. ஒப்பந்ததாரர் விண்ணப்பித்தில் ஒப்பமிட்டுள்ள மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளை மீறி செயல்படக்கூடாது. ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்பந்த காலங்களில் ஒப்பந்தத்தை மீறி பணியை விட்டு செல்லக்கூடாது. அவ்வாறு சென்றால் அவரின் காப்புத்தொகையை, இழப்பதுடன் நிர்வாகத்திற்கு ஏற்படும் நட்டத்தினையும் இவரின் நிலுவை பில் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

**<u>மாதாந்திர பில் சமர்ப்பிக்கும் முறை</u>**

1. (அ) ஒப்பந்ததாரர் மாதாந்திர பட்டியலை ( Bill ) மூன்று நகல்களில், உரிய நகல்களான இ.எஸ்.ஐ மற்றும் வருங்கால வைப்பு நிதி கட்டிய ரசீதுகளை இணைத்து சமர்பிக்கவேண்டும்.

   (ஆ) இ.எஸ்.ஐ மற்றும் வருங்கால வைப்பு நிதி கட்டிய ரசீது நகல்களை இணைக்க தவறும் பட்சத்தில் இதற்கான தொகையை நிர்வாகமே பிடித்தம் செய்து செலுத்தும்.

2. பணப்பட்டுவாடா பட்டியல் கிடைக்கப்பட்ட 30 நாட்களுக்குள் வழங்கப்படும்.

3. ஒப்பந்ததாரர் அவரது தொழிலாளர்களுக்கு சம்பளத்தை மாதம் தோறும் வழக்கத்தில் இருக்கும் குறிப்பிட்ட நாளில் விதிகளின்படி கொடுக்க வேண்டும். அவர் தொழிலாளர்களுக்கு கொடுத்த சம்பளம் சம்மந்தமான விபரங்களை தன்னுடைய மாதாந்திர பில்லுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தணை விதிகள் அனைத்தும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

# ஆவின்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
பால் பொருட்கள் பண்ணை,
எண் பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் & 30 பார்ட், அம்பத்தூர்
தொழிற்பேட்டை சென்னை - 98.

அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணை, சென்னை-98 -ல் இரண்டு ஆண்டுகளுக்கு (2017-2019) தேவையான ஐஸ்கீரிம் கப் மற்றும் கோன் வகைகளை சிப்பம் செய்து அட்டை பெட்டியில் அடுக்கி குளிர் அறையில் அடுக்கும் பணிக்கு - இரு பிரிவு ஒப்பந்த புள்ளி கோருதல்.

## ஒப்பந்தப்புள்ளி

## விலைப்புள்ளி பிரிவு

Ref.No.225/DGM(Dg)/PD/X3/2017

## பகுதி - II

| | |
|---|---|
| காலம் | : 2017 - 2019 (இரண்டு ஆண்டுகளுக்கு) |
| தயாரிக்கப்படவேண்டிய எண்ணிக்கை | : **2010 கிலோ லிட்டர் ஐஸ்கீரிம் வகைகள்**<br>50மிலி & 100மிலி கப் – 93 லட்சம் எண்கள் ( 621 கிலோ லிட்டர்)<br>கோன் – 59 லட்சம் எண்கள் ( 589 கிலோ லிட்டர்) |

# ஆவின்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
பால் உபபொருட்கள் உற்பத்திபண்ணை
அலுவலகம் எண் பிளாக் எண் 54, பிளாட் எண் 29 பார்ட் & 30 பார்ட்,
அம்பத்தூர் தொழிற்பேட்டை,
சென்னை-600 098

**Ref.No.225/DGM(Dg)/PD/X3/2017**

## விலைப்புள்ளி பிரிவு

## பகுதி - II

ஐஸ்கீரிம் கப் / கோன் வகைகளை சிப்பம் செய்தல் ரூ.__________ / 100 கப்பிற்கு

(எழுத்தால்) ரூபாய் ........................................................................................................
(அனைத்து வரிகள் GST உட்பட)

1. 100 கப் / கோன் மற்றும் விலை எண்ணால் மற்றும் எழுத்தால் தவறாமல் குறிப்பிட வேண்டும்.
2. ஒப்பந்ததாரர் டேவணித்தொகை (EMD) ஒப்பந்த விதிகளின்படி செலுத்தவேண்டும்.

ஒப்பந்ததாரர் பெயர்

முகவரி

ஒப்பந்ததாரர் கையொப்பம்